2005 மார்ச் 9] [பேரவைத் தலைவர்]

(குறுக்கீடுகள்) திரு. வி.கே. லட்சுமணன். (கூச்சல்-குழப்பம்) அவை நடவடிக்கைகளைத் தயவுசெய்து குந்தகப்படுத்தாதீர்கள். (கூச்சல்-குழப்பம்)

(சில தி.மு.க. உறுப்பினர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் இருக்கைக்கு அருகே வந்தனர்.)

தயவுசெய்து அவரவர்களுடைய இருக்கைகளிலே அமருங்கள். (கூச்சல்-குழப்பம்)

முற்பகல் 11-15

3. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்களின் குழுவின் அறிக்கைகளை அளித்தல். முனைவர் தம்பிதுரை. (குறுக்கீடுகள்)

டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) 2003 முதல் 2005 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 163 மற்றும் 164 ஆகிய இரண்டு அறிக்கைகளைக் (குறுக்கீடுகள்) குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன். (குறுக்கீடுகள்)

2. விதி 110–ன்கீழ் அறிக்கை—தொடர்ச்சி

இராஜாஜி மண்டப சுற்றுச்சுவர் அருகில் விளம்பரப் பலகை வைக்க, சிலர் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தியது—மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தொடர்பான முழு அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) மரங்களை வெட்டி, லாரியிலே ஏற்றிக் கொண்டு செல்லக்கூடிய புகைப்படத்தையும்கூட அவர்கள் காட்டியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) ஆக இதிலே, ஒன்றும் ஆதாரம் இல்லாமல் அவர்கள் எதையும் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் வேண்டுமானாலும் பாருங்கள். (குறுக்கீடுகள்)

(புகைப்படத்தைக் காண்பித்தார்.)